நகல்

10. 2. 1914 மு. கதிரேசன்

(94)

நகல் - 1

உ (1)

கணபதி துணை

மு. கதிரேசச் செட்டியார்
மகிபாலன்பட்டி
10 — 2 — 1914

மஹா மஹோபாத்தியாயர்,
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
பிரஸிடென்ஸி காலேஜ்
சென்னை.

அன்பிற் சிறந்த ஐயா, வந்தனம். சுபம்

மேலைச் சிவபுரியில் சிவபிரான் திருவருளால் நடைபெறுகின்ற, சன்மார்க்க சபையின் ஐந்தாம் வருட பூர்த்திக் கொண்டாட்டம், வரும், ஆனந்த வருஷம் சித்திரை மீ திருநாவுக்கரசு நாயனார் திருநாள் முதல் மூன்று தினங்களில் நடைபெறும். அந்நாட்களில் நடைபெறும் நம் தமிழ்ப்புலவர்களின் உபந்யாஸங்களை நலனுறச் செய்தற்கும் தாங்களரிய உபதேசங்களை யெம்மனோர் கேட்டுய்யுமாற்கும் மூன்று தினங்களிலும் தாங்களே அக்கிராசனம் மேற்று கௌரவிக்க வேண்டுமென்பது எனத்தும் ஆசையாதமாகிய உண்மைப் பெருவிருப்பமாகும். இச்சபை நம் நண்பர்களாகிய பலபண்டிதர்களை யெல்லாம் தனக்குரியவராகப் பெற்றிருக்கினும் இவ்வுலகில் நாயகமணியாகிய தங்களையும் பெறுமேல், இதனினுஞ் சிறந்த பேறு வேறு இதற்கின்றாம். இச்சபை தான் தோன்றி ஐந்து வருடங்களில் இந்நாட்டிற் சிலகலாசாலை, பிரசங்கசாலை த்தாபநம் முதலிய சில பயன்களை உதவியது. எதிர்காலத்தில் இன்னும் பல நலன்களைத் தருதற்குத் தங்கள் வருகை மிகச் சிறந்த காரணமாகும், தமிழ்த்தெய்வமாகிய தங்கள் நல்வரவை யிது பெறுமாயின் தன்னோக்கமெல்லாம் இனிது நிறைவேற்றிய தென்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று.

தங்களுக்கு ஒருசிறிதேனும் புறம்பேயுள வேலைக்குக் காலமின்றெனினும் எங்காரணத்தானும் வரப்பட்டு அவ்வரிய காலத்திற் செய்யப்படும் வேலைகளின் இதுவும் ஒன்றெனக் கொண்டு மறுக்க மாட்டீர்களென்பது என்றுணிபு. யான் பலவருடங்களாகத் தங்கள் அருமை நட்பை உணர்ச்சி வாயிலாகப் பெற்று இன்புறுகின்றேன். இனியேயான் தங்கள் பெருமையை நிறுத்துணராக் குறைவாற் செய்த செயலை "வெறுப்ப~~[illegible]~~னவே செய்யுமெனுஞ் சிறுமையை நின் பெருமையின் பொறுப்பவனே" என்றபடி பொறு~~[illegible]~~த்துக் காட்டிய

நகல்

10. 2. 1914 மு. கதிரேசன்

(94)

நகல் - 1

(2)

உயர்வினைத் தெண்ணி யெண்ணி நாணமும் வருத்த
மும் எய்தி நின்றேனெனினும், தங்களைக் காணவும்
தங்கள் அரும் பொருட் சொற்களைக் கேட்கவும்
உண்டாகிய ஆசை பெற்றினும் வலியதாக
இருக்கின்றது. உயர்ந்த நற்குண நிலயமாகிய
தங்களுக்கு இவ்விஷயந் தெரிவித்தல் வேண்டா
ததொன்றெனினும், என் மனநிலையைத் தங்
கட் கியம்புவெண்ணிச் சில எழுதினேன். பொறுக்க,,

(2) Page.

இக்காலத்திற் சபைகள் கூடுதலும் பிரசங்கஞ்
செய்தலும் ஒருவகை ஆரவார நிலையமென்
பதுண்மை. ஆனால் இச்சபை ஆரவாரத்தி
ற் சேராமை பெரும்பயக்கங் காட்டுதலும் முன்னில்லாத
சிலபயன்களைச் செய்து வருதலைப் பாத்திரத்
திற் கண்டுவருதலால் ஏனைய சில சபைகள்
போலாது இப்பக்கத்தார்க்குப் பயன்படும் இச்சபை
யென்பது தாங்கள் அறிவீர்கள். இன்னும்பல
காரியங்களைக் கல்வியுடையனாகச் செய்ய
விருப்பமுடைய துணிகர்களும் உளர்.
அவர்களையெல்லாம் ஒருங்கொத்துக் கருதிய
காரியங்களோடு புதிய சில காரியங்களையும்
இச்சமயம் தங்கள் வருகை செய்யுமென்பது
என் மனப்பூர்வமான நம்பிக்கை. எல்லாவற்றி
னும் அறிவாற்றலுடைய தங்களுக்கு
விரித்துரைப்பதென்னை.? தாங்கள் அவசி
யம் இம்முறை அக்கிராசனம் ஏற்றல்வேண்டும்
யான் முடிவாகத் தெரிவித்துக் கொள்ளும் சொல்
இதுவே. தங்கள் அன்பான உடன்பாடு தெரிந்து
ஏனைய தமிழ்ப்புலவர்களுக்குத் தெரிவித்து
மறுமொழி பெறவேண்டும். சித்திரை மாசம் திரு
நாவுக்கரசு நாயனார் திருபூசைத் தினமுதல் மூன்
றுநாள் வருஷோத்ஸவகாலம். தயவுசெய்து
இது பார்த்தவுடனே தாமசியாது மறுமொழி தர
வேண்டுகின்றேன்.

இங்ஙனம்
தங்களன்பன்
மு. கதிரேசன்

நகல்

10. 2. 1914 மு. கதிரேசன்

(94)

நகல் - 1

6.

ப. 19

~~10 - 2 - 14~~

(3)

மு. கதிரேசன்

10 - 2 - 1914

COPIED.

12. 1. 71

~~p. 634-638.~~

த. க. VOL D.

P. 385 - 390.

இவரது கடிதம் தனியே பாலத்தின் கவரில் வைக்கப்பட்டுள்ளது.

(38)